# பெண்களுக்கெதிரான பாகுபாட்டினை அகற்றுவது பற்றிய குழு

**66வது அமர்வு (13 பெப்ரவரி –3 மார்ச் 2017)**

**இலங்கை**

**அங்கவீனத்துடன் வாழும் பெண்கள்**

**அறிக்கையினைச் சமர்ப்பித்தோர்**

**இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச மையம்**

**இல 2: கின்சி டெரஸ், கொழும்பு 8**

**இலங்கை**

**www.ices.lk**

**CEDAW இணையத்தளத்தில் இந்த அறிக்கை வெளியிடப்படலாம்**

**ஜனவரி 2017**

## இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச மையம்

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச மையமானது (ICES) 34 வருடங்களாக உலகிற்கு ஆராய்ச்சிகள், கலந்துரையாடல்கள், ஆக்கபூர்வமான கலைகள் மற்றும் ஏனைய இடையீடுகள் மூலம் கருத்துக்களைப் பங்களிப்பாக வழங்கிவருவதுடன் கொள்கை நடைமுறைகளையும் அறிவித்து வருகின்றது. பல்வகைமையினை அதன் அனைத்துப் பல்கூற்றுச் சாயலுடனும் கொண்டாடுவதற்கான விருப்பத்திலேயே ICES யின் தொலைநோக்கு அடங்கியுள்ளது. இனத்துவம், அடையாள அரசியல், முரண்பாடு மற்றும் பால்நிலை பற்றிய புரிதலை ஆழப்படுத்தி, ஆராய்ச்சிகள், வெளியீடுகள், கலந்துரையாடல்கள், சிருஷ்டித்திறன்மிக்க கருத்து வெளிப்பாடுகள் மற்றும் அறிவு மாற்றம் மூலம் தேசிய ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும் உள்ளடக்கும் தன்மையும் நீதியும் சமாதானமும் கொண்ட சமூகத்திற்கான நிலைமையினைப் போஷிப்பதே ICES யின் பணிநோக்காகும்.

மீளிணக்கம், நீதி, பால்நிலை, சமூக உள்ளடக்கம் மற்றும் மனித உரிமைகள் ஆகிய பரப்பிலே ICES ஒரு முக்கியமான செயற்படுனராக விளங்கிவருவதுடன், இலங்கையில் பால்நிலைச் சமத்துவம், பால்நிலைப் பல்வகைமை, மற்றும் அரசியலமைப்பு மறுசீராக்கல் தொடர்பான விடயங்கள் பற்றிய கொள்கை மற்றும் பொதுக் கற்பனை ஆகியவற்றினைக் கட்டமைப்பதிலும் செல்வாக்கு மிக்கதாகத் திகழ்ந்து வருகின்றது. சிறுபான்மையினரது உரிமைகள் மற்றும் குழும உரிமைகளை விருத்தி செய்து மேம்படுத்த நிறுவனம் பங்களிப்பு வழங்கியுள்ளதுடன் முன்னர் ஐக்கிய நாடுகளின் விசேட தூதுவர்கள், பல்வேறு செயற்குழுக்கள் மற்றும் ஒப்பந்த அமைப்புக்களுடனும் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளது.

கடந்த காலத்திலே ICES, ஐக்கிய நாடுகளின் ECOSOC உடன் விசேட வகை மதியுரை அந்தஸ்தினைக் கொண்டிருந்ததுடன் பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய ஐநா விசேட தூதுவரும் ICES னது முன்னாள் பணிப்பாளருமான ராதிகா குமாரசுவாமியின் செயலகமாகவும் செயற்பட்டது. அண்மைக் காலங்களில் சனநாயகம் மற்றும் மனித உரிமை ஆகியவற்றின் சட்டகங்களினுள் பல்வகைமை பற்றிய ஆய்வு மற்றும் மேம்பாட்டிற்கான ஒரு மையமாகத் தனது இடத்தினை வார்த்துக்கொண்டது.

ICES மூன்று பரந்த வகிபாத்திரங்களை வகித்துவருகின்றது: ஒன்று, ஆய்வு, இரண்டாவது கொள்கைக்காக ஆதரித்து வாதாடல், மூன்றாவது, கலந்துரையாடலுக்கான தளத்தினை வழங்குதல். நிறுவனமானது பொதுக் கற்பனையினைத் தூண்டி, உண்மை, அழகு மற்றும் பல்வகைமையினை மேம்படுத்துவதற்காக சிருஷ்டித்திறன்மிகு கலைகளையும் பயன்படுத்திவருகின்றது.

### பின்புலம்

அரச தரப்புக்களின் அறிக்கைகள் அங்கவீனமான பெண்கள் பற்றிப் போதிய தகவல்களை வழங்குவதில்லை என CEDAW குழுவின் பொதுவான பரிந்துரைகள் குறிப்பிடுகின்றன. இதற்குப் பதிலளிக்குமுகமாக அங்கவீனமான சிறுமிகள் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பான பிரதான விடயங்களைக் கோடிட்டுக் காட்ட ICES இந்த அறிகையினைத் தயாரித்துள்ளது.

உலகிலே ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் அங்கவீனத்துடன் வாழ்வதாக அங்கவீனம் பற்றிய உலக அறிக்கை (2011) மதிப்பிட்டுள்ளது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 7% த்தினர் ஏதோ ஓர் அங்கவீனத்துடன் வாழ்வதாக UNESCAP மதிப்பிட்டுள்ளது. 2040ம் ஆண்டளவில் அங்கவீனமான மக்களின் எண்ணிக்கை 24.4% மாக அதிகரிக்கும் என இலங்கை சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அங்கவீனம் நிலவுகின்றமை ஆண்களை விடப் பெண்கள் மத்தியில்

மிக அதிகமாகக் காணப்படுவதாக (குறிப்பாக தாழ்வான சமூகப் - பொருளாதார மட்டம் மற்றும் கிராமிய மாவட்டங்கள் மத்தியில்) தேசிய ரீதியான கட்புலனின்மை, கேள்விக் குறைபாடு, கட்புலக் குறைபாடு மற்றும் அங்கவீனம் பற்றிய இலங்கைக் கணிப்பீடு (2014) குறிப்பிடுகின்றது. அதேவேளை இனத்துவ ரீதியாக அறிக்கையிடப்பட்ட வித்தியாசங்கள் எதுவுமில்லை. 2016 பெப்ரவரியில் இலங்கை அரசாங்கம் அங்கவீனமான நபர்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயத்தினை (UNCRPD) ஏற்றுக்கொண்டது. சமவாயத்தின் முன்னுரையின் பந்தி (d) யானது சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தினால் பற்றிப்பிடிக்கப்படுகின்ற உரிமைகளையும் (UDHR) சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (ICCP), பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (ICESCR), பெண்களுக்கெதிரான அனைத்து வடிவிலுமான பாகுபாட்டிற்கெதிரான சமவயாம் (CEDAW) போன்ற ஏனைய ஐக்கிய நாடுகளின் சமவயாங்களையும் உள்ளடக்குவதுடன் அவற்றினை மீள்உறுதியும் செய்கின்றது.

அங்கவீனத்துடன் வாழ்கின்ற சிறுமிகள் மற்றும் பெண்கள் பாகுபாடுகளின் பல்வேறு வடிவங்களிற்கு முகங்கொடுக்கின்றனர் என்பதை ஏற்றுக்கொள்வதற்கான அரச தரப்பினரின் பொறுப்பினை சமவாயத்தின் உறுப்புரை 6 கோடிட்டுக் காட்டுவதுடன் இக்காரணத்தினால் CRPD யினை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகள் அங்கவீனத்துடன் வாழும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்தி, அவற்றினைப் பூர்த்தி செய்வதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளன எனவும் கூறுகின்றது. அங்கவீனமான பெண்களின் உரிமைகளை CEDAW வெளிப்படையாகக் குறிப்பிடாத அதேவேளை, அரச தரப்புக்கள் அவற்றின் கிரமமான அறிக்கைகளில் அங்கவீனமான பெண்களின் நிலை பற்றிக் குறிப்பிடல் வேண்டும் என CEDAW குழுவின் பரிந்துரை 18 தேவைப்படுத்துகின்றது. அங்கவீனமான பெண்கள் வன்முறை, காயம் அல்லது துஷ்பிரயோகம், புறக்கணிப்பு அல்லது புறக்கணிப்பு மிகு முறையில் நடத்தப்படல், மோசமாக நடத்தப்படல் அல்லது சுரண்டல் ஆகியவற்றினுள்ளும் அவ்வாறானவற்றிற்கு வெளியேயும் பாரிய அபாயநேர்வினைக் கொண்டுள்ளனர் என்பதை CRPD யின் முன்னுரையின் பந்தி (q) ஏற்றுக்கொள்கின்றது. இலங்கை அரசாங்கத்தின் CEDAW விற்கான கிரமமான சமர்ப்பணத்தின் சூழமைவிலும் CRPD னைப் பற்றிப் பிடிப்பதற்கான அரசாங்கத்தின் புதிய பொறுப்பு எனும் சூழமைவிலும் இலங்கையின் இரண்டு மாவட்டங்களான கிளிநொச்சி மற்றும் கண்டி ஆகியவற்றில் தற்போது நடைபெற்றுவரும் பூர்வாங்க ஆய்விலிருந்து பெற்றுக்கொண்ட அங்கவீனத்துடன் வாழும் பெண்களின் நிலையினை இந்த அறிக்கை கோடிட்டுக் காட்ட முயற்சிக்கின்றது.

**ICES – அங்கவீனம் பற்றிய ஆய்வு மற்றும் ஆதரித்து வாதாடல்**

அங்கவீனமான நபர்களின் உரிமைகள் தொடர்பாக 2013ம் ஆண்டிலிருந்து ICES ஆதரித்து வாதாடலில் ஈடுபட்டு வருகின்றது. வரைபு அங்கவீனச் சட்டம், அங்கவீனமான நபர்களின் வாக்களிக்கும் உரிமைகள், அங்கவீனம் மற்றும் மீளிணக்கம் மற்றும் அங்கவீனம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு ஆகியவை தொடர்பாக ICES தொடரான கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. 'அங்கவீனத்தினை உள்ளடக்கிய' மீளிணக்கம் மற்றும் இடைமாற்ற நீதிச் செயன்முறை மற்றும் பொறிமுறைக்கான தேவையினைச் சுட்டிக்காட்டி மீளிணக்கப் பொறிமுறை பற்றிய கலந்தாலோசனைச் செயலணியிடம் (CTF) 2016ம் ஆண்டில் ICES சமர்ப்பணம் ஒன்றினை முன்வைத்தது. மனித உரிமைகள் பற்றிய தேசிய செயற்திட்டத்தினை வரைவதில் 2016ல் ICES பங்குபற்றியது.

அங்கவீனமான பெண்கள் முகங்கொடுக்கும் சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரத் தடைகளை அடையாளம் காண்பதற்காக 2015ம் ஆண்டிலே கண்டியிலே *ஹெண்டிகெப் இண்டர்நேஷனலுடனும் பெண்கள் அபிவிருத்தி மையத்துடனும்* ICES பங்காண்மை அமைத்துக்கொண்டது. ஆய்வானது

யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தின் கிளிநொச்சியிலும் யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்படாததும் சிங்கள - பௌத்த அடிப்படைவாதச் சித்தாந்தங்கள் நிலவுவதைக் காட்டுகின்றதுமான மத்திய மாகாணத்தின் கண்டியிலும் கவனம் குவிக்கின்றது. அங்கவீனமான பெண்கள் யுத்தத்திற்குப் பின்னரான மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தித் திட்டமிடல் முயற்சிகளில் கலந்தாலோசிக்கப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளனரா மேலும் நாட்டில் இடம்பெறும் மீளிணக்கச் செயன்முறைகள் அதனுடன் தொடர்புடைய கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களில் பங்குபற்ற வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனரா என்பதைப் புரிந்துகொள்ள ஆய்வு முயற்சிக்கின்றது. யுத்தத்தின் பின்னர் பொருளாதார மற்றும் சமூக உறுதிநிலையினை மீளக்கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அங்கவீனமான பெண்களை உள்ளடக்கியுள்ளதா என்பதைப் புரிந்துகொள்ள ஆய்வு முயற்சிக்கின்றது.

பயன்படுத்தப்படும் ஆய்வு முறையானது தகவல்களை ஆழமாகப் பகுப்பாய்வு செய்வதற்கான முறைமை வாய்ந்த கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. இது அரச மற்றும் அரச சார்பற்ற பங்கீடுபாட்டாளர்களை உள்ளடக்கிய பிரதான தகவலாளர்களை / நிபுணர்களை (KII/EI) நேர்காண்பதற்கும் சமுதாய மட்டக் குழுக்களுடனும் நிறுவனங்களுடனும் (அங்கவீனமான நபர்களின் நிறுவனங்கள் உள்ளடங்கலாக) இலக்குக் குழுக் கலந்துரையாடல்களை (FGD) நடத்துவதற்கும் அங்கவீனமான பெண்களுடன் ஆழமான நேர்காணல்களை நடத்துவதற்குமான பகுதியாகக் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்களின் மூன்று அட்டவணைகளைக் கொண்டுள்ளது.

சமுதாய மட்டப் பெண்கள் குழுக்கள், கிராமத்திலுள்ள கிராமிய அபிவிருத்தி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நடத்தப்பட்ட 15 இலக்குக் குழுக் கலந்துரையாடல்களிலிருந்து இதுவரை சேகரிக்கப்பட்ட தரவுகளையும் பிரதான தகவலாளர்களுடனான (கண்டியிலிருந்து 6, கிளிநொச்சியிலிருந்து 3, தேசிய மட்டத்தில் 1) 10 நேர்காணல்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளையும் இந்த அறிக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. 2013 ம் ஆண்டிலிருந்து ICES னால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆதரித்து வாதாடல் கூட்டங்களிலிருந்து பெறப்பட்ட பலன்களிலிருந்தும் இந்த அறிக்கை தகவல்களைப் பெற்றுள்ளது.

ஆய்வுகள் தொடர்ந்த அதேவேளை, அங்கவீனமான பெண்கள் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மட்டங்களில் முகங்கொடுத்த உரிமை மீறல்கள் பற்றிய தகவல்களை நாம் பெற்றுள்ளோம். அரச தரப்பு அறிக்கை பற்றிய தனது அவதானிப்புக்களை CEDAW வழங்குகையில் இந்த விடயங்களையும் அது பரிசீலிக்கும் என ICES எதிர்பார்க்கின்றது.

விடயங்கள்:

1. **தேசிய தீர்மானம் வகுத்தல் மன்றங்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாமை**

நிலிவிவரும் பால்நிலைக் கொள்கைகளும் சட்டவாக்கங்களும் அங்கவீனத்தினை உள்ளடக்குபவையாக இல்லாத அதேவேளை, பெண்களை உள்ளடக்குவதிலும் பால்நிலைக் கூருணர்வுமிக்கவையாக இருப்பதிலும் அங்கவீனம் தொடர்பான கொள்கைகள் பலவீனமானவையாக இருக்கின்றன. 1965 ஆம் ஆண்டின் இலங்கையின் அங்கவீனமானோர் சட்டமானது தேசிய மட்டத்தில் ஆலோசனை வகுத்துலுக்கான கலந்தாலோசிப்புக் குழுவினை நிறுவுவதற்கான சட்டமான CRPD அமுலுக்கு வருவதற்கு முன்னர் கொண்டுவரப்பட்ட சட்டமாகும். *அங்கவீனமானோர் நபர்கள் பற்றிய தேசிய கவுன்சில்* எனும் இந்தக் குழுவிற்கு (NCPD), அங்கவீனமான நபர்களுக்கெனக் குறித்தொதுக்கப்பட்டு நடைபெற்றுவரும் நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு சமூக சேவைகள் அமைச்சரிற்கு ஆலோசனை வழங்குவதற்கான ஆணை வழங்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவிற்கான என்ஜீஓ உறுப்பினர்கள் சமூக சேவைகள் நலனோம்புகை அமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். தற்போது யினது தீர்மானம் வகுத்தல் மட்டத்தில் அங்கவீனமான பெண்கள் யாருமில்லை. அங்கவீனக் கொள்கைகளில் அங்கவீனமான பெண்கள்

நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துவதற்கு இது வாய்ப்பினை வழங்கவில்லை. கண்டியிலே கட்புலக் குறைபாடுடைய பெண் ஒருவருடன் (மாவட்டப் பார்வையற்றோர் சபையின் நிர்வாகக் குழு உறுப்பினர்) நேர்காணல் நடத்தியபோது, அங்கவீனக் கொள்கைகளும் நடைமுறைகளும் பெண்களுக்குக் கூருணர்வுமிக்கவையாக இல்லை என அவர் குறிப்பிட்டார் *"அங்கவீனத்தினை அனுபவிப்பவர்களுக்கே உண்மையில் அதன் வலியும் சிரமமும் புரியுமேயன்றி புறத்தாருக்கல்ல"*

## *2.* முறைசார் கல்விக்கான தடைகள்

2001 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி, அங்கவீனமான ஆண்களுடன் ஒப்பிடுகையில் அங்கவீனமான பெண்கள் மத்தியில் கல்வி மட்டமானது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. கண்டியினைச் சேர்ந்த கட்புலக் குறைபாடுடைய இரண்டு பெண்களும் கிளிநொச்சியினைச் சேர்ந்த, ஒரு கால் அகற்றப்பட்ட (யுத்தப் பாதிப்பினால்), பெண் ஒருவரும் மாத்திரமே கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு வரையில் கற்கக்கூடியவர்களாக இருந்திருக்கின்றனர். எவ்வாறாயினும், இவர்களில் எவருமே உயர்தரப் பரீட்சையில் சித்தியடையவில்லை. நேர்காணப்பட்ட அங்கவீனமான ஏனைய பெண்கள் 5ம் வகுப்பு வரையில் கல்வி கற்றுள்ளனர். வகுப்பறையில் பாகுபாடு காட்டப்படல், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாமை மற்றும் செயற்திறனற்ற கற்பித்தல் முறைகள் காரணமாக இவர்கள் கல்வியை இடைநடுவில் விட்டுவிட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். கண்டியிலே நேர்காணப்பட்ட ஒரு பெண் தான் சிறு வயதில் பார்வையினை இழந்துவிட்டதாகவும் தான் ஒரு போதுமே பாடசாலை செல்லவில்லை எனவும் கூறினார். கிளிநொச்சியில் அதிகமான பெண்களின் கல்வி யுத்தத்தின் காரணமாகத் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் பொருளாதார ரீதியாக இப்பெண்கள் ஏனையோரில் தங்கியுள்ள காரணத்தினாலும் நடமாட்டப் பிரச்சினை காரணமாகவும் இவர்கள் தமது கல்வியினைத் தொடர முடியாது உள்ளனர்.

ஒரு வகையான பாகுபாடு அங்கவீனமான பெண்கள் முகங்கொடுக்கும் ஏனைய இழப்புக்களுக்குக் காரணமாக அமைவதுடன் அவற்றினை மோசமாக்கவும் செய்கின்றன. நாம் நேர்கண்ட பெண்களுள் 90%மானவர்கள் கல்வி மற்றும் திறன் பயிற்சியினைப் பூர்த்தி செய்வதற்கான அற்பமான வாய்ப்புக்கள் கொண்ட அல்லது வாய்ப்புக்களே அற்ற தாழ்ந்த பொருளாதார நிலையுடையவர்களாக இருப்பது நேர்காணல் மூலம் சான்றாகக் காணக்கூடியதாக இருந்தது.

## 3. மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வாய்ப்புக்கள்

கிளிநொச்சியிலும் கண்டியிலும் அங்கவீனமான பெண்கள் தமக்கு நிரந்தர ஊதியத்தினைத் தரும் தொழிலை வழங்கக்கூடிய தொழிற்துறைகளை அமைத்துத் தருமாறு மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தனர்: 'எமக்குத் தேவையானது தொழில்களும் வாய்ப்புக்களுமாகும். சிற்றினக் கடன் திட்டங்களால் எமது சிறிய குடிசைக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரத்திற்கு உதவமுடியாது – ஏனெனில் அதனை எல்லோருமே இங்கே மேற்கொள்கின்றனர். சகல என்ஜீஓக்களும் வீடுகளை மையப்படுத்திய வாழ்வாதாரத் தெரிவுகளை வழங்குகின்றனர். இங்கே எமது சந்தைகள் வரையறுக்கப்பட்டவை. இதனால் நாம் சில மாதங்களில் எமது முயற்சியில் தோல்வியடைந்துவிடுகின்றோம்'. "எமக்கு எமது திறனை அடிப்படையாகக் கொண்ட ஊதியத் தொழில் தெரிவுகளும் தொழில் புரிகையில் வழங்கப்படும் பயிற்சி வாய்ப்புக்களுமே தேவை". 'உற்பத்தி அல்லது திறனின் காரணமாக அங்கவீனமான பெண்களினால் சந்தையினை வசப்படுத்த முடியுமாக இருந்தால், அவர்கள் அந்த வாய்ப்பினைக் கைவிடமாட்டார்கள். சந்தையினைப் பிடிப்பதே முக்கியமானதாகும்'. 'அங்கவீனமானவர்கள் தொழில்வாய்ப்பிற்குத் தகுதிபெறுவதற்காகத்' திறன்களையும் அறிவினையும் பெற்றுக்கொள்ள அரசாங்கம் அவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குமென 2002ம் ஆண்டின் தேசிய தொழில்வாய்ப்புக் கொள்கை குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும் அரசாங்கத்தினதும்

என்ஜீஓக்களினதும் இடையீடுகள் சுய தொழில்வாய்ப்புத் திட்டங்களிலேயே கவனம் குவித்து வருகின்றன. சமூக சேவைகள் அமைச்சும் என்ஜீஓக்களும் சேர்ந்து மரபுரீதியான சுயதொழில் வாய்ப்புக் கருத்திட்டங்களையே அங்கவீனமான பெண்களுக்கு அறிமுகப்படுத்தி வருகின்றன. இவ்வாறான இடையீடுகளின் மையமாக சிற்றினக் கடன் திட்டம் அல்லது ஆரம்பத் தொழில் மானியம் அமைந்துள்ளது. அங்கவீனமான பெண்களின் பொருளாதார மட்டத்தினை உயர்த்துவதில் இவ்வாறான இடையீடுகளில் கணிசமானவை தோல்வியடைந்துள்ளன. ஏனெனில், இவற்றினால் உலகளாவிய சந்தை இயங்குசக்திகளுடன் போட்டி போட முடியாமலுள்ளது. பெண்களுக்கு நீண்ட கால, நீடுறுதியான வருமானப் பிறப்பாக்கத்தினை உறுதிப்படுத்தும் வாழ்வாதார உதவியே கிளிநொச்சியிலும் கண்டியிலும் கோரப்பட்டன.

நேர்காணப்பட்டவர்களில் கிளிநொச்சியினைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மாத்திரமே சிறிய கணக்காய்வு நிறுவனத்திலும் புகைப்பட ஸ்டுடியோவிலும் தொழில்வாய்ப்புப் பெற்றிருந்த அதேவேளை நேர்காணப்பட்ட ஏனைய அங்கவீனமான பெண்கள் கிரமமான மற்றும் நிலையான வருமானப் பிறப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. இவர்கள் வறிய மற்றும் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பத்தினைச் சேர்ந்தவர்களாக இருந்ததுடன் தமது வாழ்க்கைச் செலவுகளிற்கு குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களில் தங்கியுள்ளவர்களாக இருந்தனர். கண்டியைச் சேர்ந்த ஒரு பெண் தொழில்முயற்சியாளராக, சிறிய வாடகைக் கடையில் கைக்கடிகாரங்களையும் மணிக்கூடுகளையும் தொலைபேசிகளையும் திருத்துபவராகத் தொழில்புரிகின்றார். கண்டியினைச் சேர்ந்த பார்வைக் குறைபாடுடைய பெண் ஒருவர் தான் காலஞ்சென்ற தனது தந்தையின் ஓய்வூதியத்தினைப் பெறுவதாகக் குறிப்பிட்ட அதேவேளை, அங்கவீனமான இரண்டு பெண்கள் தாம் சமூகசேவைகள் வலுவூட்டல் அமைச்சிடமிருந்து மாதாந்தம் நலனோம்புகை மானியமாக 3000 ரூபாவினைப் பெறுவதாகக் குறிப்பிட்டனர். கிளிநொச்சியினைச் சேர்ந்த நேர்காணப்பட்ட பெண்கள் யாரும் அரசாங்கத் திட்டத்தினால் வழங்கப்படும் 3000 ரூபாவினைப் பெறவில்லை. இவர்கள் இந்த உதவித் தொகைக்கு விண்ணப்பித்துள்ள போதிலும் இன்னும் அதற்காகக் காத்திருக்கின்றனர். சிறிய ஒரு தொழிலினை ஆரம்பிக்க ஆர்வம் கொண்டுள்ள பெண் ஒருவர் 'தாம் அங்கவீனமாக இருக்கின்ற காரணத்தினால் உத்தரவாதம் வழங்குபவர்களைத் தாம் குறிப்பிட்ட போதிலும் வங்கிகளும் குத்தகைக் கம்பனிகளும் தமக்குக் கடன் வழங்குவதில்லை' எனக் குறிப்பிட்டார்.

## 4. கட்டமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் / உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்தில் காணப்படும் தடைகள்

இரண்டு மாவட்டங்களிலும் நேர்காணப்பட்ட சகல பெண்களும் தமக்கிருக்கும் பிரதான சவாலாக போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமையினையும் கட்டமைக்கப்பட்ட சுற்றுச் சூழலில் காணப்படும் தடைகளையும் குறிப்பிட்டனர். அணுகல் தராதரங்களுக்கு அரசாங்க உட்கட்டமைப்புக்கள் இயைபுறாத காரணத்தினால் சேவைகளையும் வாழ்வாதார வாய்ப்புக்களையும் அணுகமுடியாதவர்களாக உள்ள இந்தப் பெண்கள் சுயாதீனமாகச் செயற்படமுடியாதவர்களாக உள்ளனர். நேர்காணப்பட்ட சகல பெண்களும் வறிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன் கண்டி மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் கிராமப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதனால் பொதுப் போக்குவரத்திலேயே தங்கியுள்ளனர். கண்டியிலே நேர்காணப்பட்ட சகல பெண்களும் தாம் பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்துகையில் தம்முடன் வந்து தமக்கு உதவுவதற்காக குடும்ப உறுப்பினர் ஒருவரில் அல்லது நண்பியில் தங்கியிருப்பதாகத் தெரிவித்ததுடன் இவ்வாறு தங்கியிருத்தலானது தமது நடமாட்டத்தினையும் தமது சுதந்திரத்தினையும் மட்டுப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டனர். இரண்டு மாவட்டங்களிலும் கிராமிய வீதிகளும் வங்கிகள், சமயத் தலங்கள் மற்றும் சமுதாய மையங்கள் உள்ளிட்ட பொதுச் சேவை அமைவிடங்கள் மற்றும் வீடுகளுக்கிடையிலான தூரமும் அதிகமாக இருப்பது சவாலாக இருப்பதுடன்

சுதந்திரமாகப் பொது வாழ்வில் ஈடுபடும் சுதந்திரத்தினைப் பறித்துள்ளதாகவும் இப்பெண்கள் குறிப்பிட்டனர்.

### 5. தமது வாக்குரிமையினைச் சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கான தடைகள்

வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ள 14.5 மில்லியன் மக்களில் சுமார் 2 மில்லியன் பேர் உடல்ரீதியாக அங்கவீனமானவர்கள். இவர்கள் முச்சக்கரவண்டியினைப் பயன்படுத்துபவர்களாகவும் பார்வைக் குறைபாடுடையவர்களாகவும் இருப்பதுடன் மரபு ரீதியாக பாடசாலைகளிலும் சமயத் தலங்களிலும் அமைக்கப்படும் வாக்குச் சாவடிகளை அணுகுவதில் தடைகளை எதிர்நோக்கும் அங்கவீனத்தினைக் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

நேர்காணப்பட்ட சகல அங்கவீனமான பெண்களும் அண்மைய தேர்தல்களில் வாக்களித்துள்ளனர். எவ்வாறாயினும் நேர்காணப்பட்ட பெண்களில் பார்வைக் குறைபாடுடைய ஐந்து பெண்கள் தமது வாக்குச் சீட்டுக்களைத் தம்மால் வாசித்து அடையாளமிட முடியாத காரணத்தினால் அதனை வாக்குச் சாவடியில் கடமையாற்றிய தேர்தல் அதிகாரியே அடையாளமிட்டதாகக் குறிப்பிட்டனர். 'தேர்தல் தினத்தில் வாக்களிக்க வாக்குச் சாவடிக்குச் செல்வது எனக்கு விருப்பமான ஒன்றாகும்' என கண்டியினைச் சேர்ந்த பார்வைக் குறைபாடுடைய பெண் ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், 'நான் எனது சகோதரியுடன் வாக்குச் சாவடிக்குச் செல்வேன். ஆனால் வாக்குப் பெட்டிக்கு அருகில் தனியே வாக்களிக்கச் செல்லும் எனக்கு உத்தியோகத்தர் ஒருவரே வாக்குச் சீட்டில் அடையாளமிட உதவினார்'. சக்கர நாற்காலிகளை அத்துடன் / அல்லது ஊன்றுகோல்களைப் பயன்படுத்தும் அங்கவீனமான பெண்களுக்கு வாக்குச் சாவடிகளுக்குச் செல்ல முன்னுரிமைகள் வழஙகப்பட்டுள்ள போதிலும் (வரிசையில் காத்திருக்கவேண்டிய தேவையில்லை) வாக்குச் சாவடிகளினுள் மேசைகளும் கதிரைகளும் போடப்பட்டுள்ள முறைகளும் அதிகாரிகளின் ஆசனங்கள் இடப்பட்டுள்ள முறையும் சக்கர நாற்காலிகளை சாவடிக்குள் இலகுவாகக் கொண்டுசெல்வதற்குத் தடையாக இருப்பதுடன் அத்துடன் / அல்லது வாக்குச் சாவடிகளை இலகுவாக அணுகுவதும் தடையாக இருக்கின்றது. தபால் வாக்களிப்பு, இலத்திரனியல் / தொலைபேசி வாக்களிப்பு மற்றும் பிரெய்ல் வாக்களிப்பு போன்றவற்றினை அறிமுகப்படுத்தும் ஆலோசனைகளை இலக்குக் குழுக் கலந்துரையாடல்களில் அங்கவீனமான பெண்கள் முன்வைத்தனர்.

### 6. தனித்துவமான மற்றும் உயர் தரத்திலான உதவிக் கருவிகளுக்கான தேவை

சமூக வலுவூட்டல் நலனோம்புகை அமைச்சினால் வழங்கப்படும் உதவிச் சாதனங்கள் மோசமான தரத்தினைக் கொண்டுள்ளதாக அல்லது வடிவமைப்பில் தனித்துவமான அம்சங்கள் அற்றதாக இருப்பதாகவும் 'ஒரு அளவே அனைவருக்கும் பொருந்தும்' எனும் அணுகுமுறை' பெண்கள் கொண்டுள்ள அங்கவீனத்தின் மட்டங்கள் பற்றிய கூருணர்வு அற்றது எனவும் நேர்காணப்பட்ட பெண்கள் தெரிவித்தனர். நேர்காணப்பட்ட அங்கவீனமான பெண்கள் வெவ்வேறு மட்டங்களிலான மற்றும் வகைகளிலான அங்கவீனத்தினைக் கொண்டிருந்தனர். ஒவ்வொரு தனிநபரினதும் அங்கவீனத்தினைக் கருத்திற்கொள்ளும் செயற்கை அவயவங்கள், அவயவங்களை வலுப்படுத்தும் பொருத்துகைகள், சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள் மற்றும் வெள்ளைப் பிரம்புகள் உள்ளிட்ட உதவிச் சாதனங்களைக் கோரினர். இரண்டு மாவட்டங்களிலும் அங்கவீனமான பெண்களின் புனர்வாழ்விற்கு உதவுவதற்கும் அவர்களின் சிகிச்சைத் தேவைகளுக்கு உதவுவதற்கும் அவர்களுக்கு தனித்துவமான உதவிச் சாதனங்களை வழங்குவதற்கும் அரசாங்கத்தினை விட அரச சார்பற்ற நிறுவனங்களே மிக முக்கியமான வகிபாத்திரத்தினை வகித்துள்ளன.

அரசாங்கத்தினால் (சமூக வலுவூட்டல் அமைச்சு) அமுல்படுத்தப்படும் சமுதாய மட்டப் புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அங்கவீனமான சமுதாய உறுப்பினர்களை (சிறுவர்கள் உள்ளடங்கலாக) அடையாளங்கண்டு புனர்வாழ்விற்கும் உதவிச் சாதனங்களைப் பொருத்துவதற்காகவும் சுகாதார அமைச்சுடன் உசாவல் தொடர்பாகப் பின்தொடரல்களை மேற்கொள்கின்றன எனப் பிரதான அவதானிப்பாளர்கள் தெரிவித்தனர். ஆனால் இரண்டு துறைகளுக்குமிடையில் பொருந்தாத தன்மைகள் காணப்படுகின்றன. இரண்டு அமைச்சுக்களினது பிரதிநிதிகளுக்குமிடையில் ஒத்துழைப்பிற்கான தேவை காணப்படுவதுடன் இந்த விடயம் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது.

### 7. பல்துறைப் பொறிமுறை மற்றும் சுயாதீனமான உரிமைகள் கண்காணிப்புப் பொறிமுறைக்கான தேவை

அங்கவீனமானோருக்கான சேவைகள் மற்றும் உரிமைகளின் மேம்பாடு ஆகியவை எந்தவொரு அமைச்சினதோ அல்லது திணைக்களத்தினதோ பொறுப்பாக இருக்கக்கூடாது. அங்கவீனமானோரின் உரிமைகளின் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் அவற்றினை அடைந்துகொள்ளல் ஆகியவை, குறிப்பாக அங்கவீனமான பெண்களின் உரிமைகளை அடைந்துகொள்ளல், பல்வேறு அரசாங்க அமைப்புக்களின் மத்தியில் ஒத்துழைப்பினைத் தேவைப்படுத்துகின்றது. இந்தப் பல்துறை சார்ந்த அணுகுமுறையானது அங்கவீனம் பற்றிய தேசிய செயற்திட்டத்தில்(NAPD) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. .NAPD பாராளுமன்றத்தில் 2014ல் நிறைவேற்றப்பட்டது. இது பல்வேறு அமைச்சுக்களின் மத்தியிலான ஒத்துழைப்புமிகு செயன்முறை மூலமாக அங்கவீனமானோரின் உரிமைகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சியாகும்: சுகாதாரம், கல்வி, சமூக சேவைகள், நீதி, தொழில் மற்றும் வெளிவிவகாரம். எவ்வாறாயினும், இந்தச் செயற்திட்டத்திற்கு நிதியிடப்படவுமில்லை அல்லது அமுல்படுத்தப்படவுமில்லை. இரண்டு மாவட்டங்களிலும் அங்கவீனமான பெண்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களினதும் அங்கவீனமான நபர்கள் மற்றும் அங்கவீன உரிமைகள் நிறுவனங்களுடன் நடத்தப்பட்ட பல ஆதரித்து வாதாடல் கூட்டங்களினதும் பலனாக பின்வருவனவற்றினை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும் என ICES பரிந்துரைக்கின்றது:

1. அங்கவீனமான சிறுமிகள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக அங்கவீனமான நபர்களின் உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக மகளிர் மற்றும் சிறுவர் வலுவூட்டல் அமைச்சு, சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு நீதி அமைச்சு, தொழில் அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றினை இயலுமாக்குகின்ற அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் அமைந்துள்ள ஒருங்கிணைப்புப் பொறிமுறை
2. நியதிச் சட்டங்களினால் சுயாதீனமான ‘அங்கவீன உரிமைகள் ஆணைக்குழுவினை’ நிறுவுதல். அங்கவீனமான சிறுமிகள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக அங்கவீனமான நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்தி, உரிமைகளை அடையச்செய்வதற்காக அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் (அரசியலமைப்பினால் நிறுவப்படுவது) பேரில் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர்.

### CEDAW குழுவிற்கான பரிந்துரைகள்

அங்கவீனமான சிறுமிகள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக அங்கவீனமான நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்தி, உரிமைகளை அடையச்செய்வதற்காக சுயாதீனமான ‘அங்கவீன உரிமைகள் ஆணைக்குழுவினை’ இலங்கை அரசாங்கமானது நியதிச் சட்டங்களினால் நிறுவுகின்றது. அங்கவீனமான சிறுமிகள் மற்றும் பெண்கள் உள்ளடங்கலாக

அங்கவீனமான நபர்களின் உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக மகளிர் மற்றும் சிறுவர் வலுவூட்டல் அமைச்சு, சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு, நிதிமைச்சு, போக்குவரத்தது அமைச்சு, வீடமைப்பு நிர்மாண அமைச்சு, தொழில் அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றினை இயலுமாக்குகின்ற அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் அமைந்துள்ள ஒருங்கிணைப்புப் பொறிமுறையினை இலங்கை அரசாங்கம் நிறுவவேண்டும்.

CRPD யில் உள்ளடங்கியுள்ள விழுமியங்கள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றிலிருந்து உள்ளீடுகளைப் பெற்று அங்கவீனமான பெண்கள் மற்றும் சிறுமிகளின் பூரண பங்குபற்றலுடன் அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய புதிய சட்டத்தினை இலங்கை அரசாங்கம் வரையவேண்டும். அங்கவீனம் பற்றிய தேசிய செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நிதி மற்றும் ஏனைய வளங்களை வழங்கவேண்டும். மேலும் அதன் அமுல்படுத்தலில் பங்குபற்ற பெண்களுக்கும் சிறுமிகளுக்குமான பொறிமுறைகளை வழங்கவேண்டும். இலங்கை அரசாங்கம் 2006ம் ஆண்டின் 1 ஆம் இலக்க 'அங்கவீனமான நபர்கள் அணுகல் ஒழுங்குவிதிகளைப்' பூரணமாக அமுல்படுத்தி சகல அரச கட்டிடங்களும் அங்கவீனமான பெண்கள் மற்றும் சிறுமிகளினால் அணுகக்கூடியதாகவுள்ளது என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

அங்கவீனமான பெண்கள் மற்றும் சிறுமிகள் உள்ளடங்கலாக அங்கவீனமான நபர்களுக்கு பொதுப்போக்குவரத்தில் 10% மானது அணுகக்கூடியதாக உள்ளதை உறுதிப்படுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்கவீனமான பெண்கள் உள்ளடங்கலாக அங்கவீனமான நபர்களினால் சகல வாக்களிப்பு நிலையங்களையும் அணுகக்கூடியதாகவுள்ளதை உறுதிப்படுத்தவும் தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் நடத்தப்படும் தேர்தல்கள் தொடர்பான சகல செயன்முறைகளும் அங்கவீனமான பெண்கள் உள்ளடங்கலாக அங்கவீனமான நபர்கள் தமது வாக்களிக்கும் உரிமையினை சுதந்திரமாகவும் நியாயமாகவும் பிரயோகிப்பதை இயலுமாக்குவதை உறுதிப்படுத்தவும் இலங்கை அரசாங்கம் தேர்தல்கள் ஆணையகத்துடன் கலந்தாலோசிப்பினை நடத்தவேண்டும். அங்கவீனமான பெண்களுக்கு நிரந்தரத் தொழில்வாய்ப்பு வசதிகளை வழங்கும் ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் வசதிப்படுத்துவேண்டும். அங்கவீனமான பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உயர் தரத்திலான மற்றும் தனித்துவமான உதவிச் சாதனங்கள் வழங்கப்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும்.